

# யாமினியின் அதிசய உலகம்

பூங்கோதை

STEM-KALVI CHARITY

Science | Technology | Engineering | Mathematics

STEM-Kalvi Charity

4.1



முன் ஒரு காலத்தில், நகரும் மலைகள், ஒளி தரும் நதிகளுக்கு இடையில் மாய உலகு ஒன்று இருந்தது. அங்கு யாமினி என்கின்ற துடிப்பான, கருணை உள்ளம் கொண்ட சிறுமி வாழ்ந்து வந்தாள் . யாமினிக்கு சாகசத்தில் ஆர்வம் கொண்ட சிந்தனையும் இருந்தது.



ஒரு பனி விழும் விடிகாலையில், யாமினி தனது வீட்டிற்கு அருகில் உள்ள அதிசய வனத்தை ஆராய்ந்து கொண்டிருந்தாள். அப்போது வானவில்லின் வண்ணங்களில் ஒளிரும் மேடு ஒன்றின் மீது தடுக்கி விழுந்தாள்.



அவள் எழுந்து நின்ற போது, அந்த மேட்டுப் பகுதியின் மத்தியில்  கம்பீரமான மந்திரக் குதிரை ஒன்று  நின்றது.

.

அதன் உரோமங்கள்  புதிதாக விழுந்த பனியைப் போல வெண்மையாக இருந்தன. அதன் மேனி நட்சத்திரங்களின் ஒளி போல மினுங்கியபடி இருந்தது.



அழகான அந்த மந்திரக் குதிரையைப் பார்த்த
யாமினியின்  கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.
"வணக்கம் யாமினி!,  நான் உங்களுக்காக
காத்திருக்கிறேன்." மந்திரக் குதிரை பேசியது.



“நீங்கள் யார்?" யாமினி தைரியமாகக் கேட்டாள். "எனக்குப் பெயர் சிட்டு." மந்திரக் குதிரை கனிவான கண்களோடும், மென்மையான புன்னகையோடும் யாமினியைப் பார்த்தது.



யாமினியின்  இதயம் உற்சாகத்தில் துடித்தது.
"நீங்கள் எனக்காகக் காத்திருந்தீர்களா?  ஏன்?"



"யாமினி, உங்களிடம் ஒரு அரிய பொருள் இருக்கிறது. கற்பனை நிறைந்த இதயம், தைரியம் நிறைந்த உள்ளம் என்னும் இரண்டும் இணைந்தது தான் அது. அதைப் பாவித்து இந்த உலகத்தை இன்னும் அதிசயிக்க வைக்கும் அற்புதமான சாகசங்களை நாம் மேற்கொள்ளலாம்." சிட்டு பேசியது.



"என் முதுகில் ஏறிக் கொள்ளுங்கள்!”,

சிட்டு பணிவாகக் கட்டளை இட்டது.
ஆராய்வதில் ஆர்வம் கொண்ட யாமினி சிட்டுவின் முதுகில் ஏறினாள். ஒரு மென்மையான பாய்ச்சலுடன், அவர்கள் வானத்தில் உயரப் பறந்தனர்.



அவர்களின் முதல் இலக்கு மேகங்களின் உலகு.
“பஞ்சு போன்ற மேகங்கள் விசித்திரமான வடிவங்களை உருவாக்கி, குறும்புக்கார மேக தேவதைகளுக்கு விளையாட்டுக் காட்டுவதைப் பார்த்தாயா, யாமினி?” சிட்டு யாமினியைக் கேட்டது.
அவள் அவற்றை அதிசயத்தோடு பார்த்து இரசித்தாள்.



"அடுத்து, என்னை  கடல் அலைகளுக்கு அடியே இருக்கும் கடற் தேவதைகளின்  உலகுக்குக் கூட்டிச் செல்வாயா, சிட்டு?"

"அதற்கென்ன போகலாமே." சிட்டு அன்போடு கூறியது.

அங்கு யாமினி  மயக்கும் மெல்லிசைகளைப் பாடும், கடலின்  அதிசயங்களைப் பற்றிய கதைகளைப் பகிர்ந்து கொள்ளும் தேவதைகளுடன் பழகி, நட்பை ஏற்படுத்தினாள்.



அவர்களின் சாகசங்கள் அவர்களை அதிசய அரண்மனைகள், இரகசியத் தோட்டங்களைக் கடந்து சந்திரனுக்குக் கூட அழைத்துச் சென்றன.
அங்கு அவர்கள் நட்சத்திரங்களுக்கு இடையில் நடனமாடி, பிரபஞ்சத்தின் இரகசியங்களைக் கற்றுக்கொண்டனர். நாட்கள் கடந்த போது யாமினியும் சிட்டுவும் மிகுந்த அன்போடு தமது நட்பை இறுக்கமாக்கினர். அவர்களின் அதிசய, இரகசிய உலகத்தின் மீதான ஈர்ப்பும் ஆழமடைந்தது.



ஒரு நாள், யாமினியும் சிட்டுவும் ஒரு மலை உச்சியில் இருந்து சூரிய அஸ்தமனத்தைப் பார்த்து இரசித்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது "இந்த சாகசங்கள் நான் கற்பனை செய்ததை விட மிகவும் அற்புதமானவை." என்று யாமினி கூறினாள்.

சிட்டு யாமினியின் கைகளை அன்புடன் நக்கியது. "மேலும் பல சாகசங்கள் நமக்காகக் காத்திருக்கின்றன. யாமினி , நாங்கள் எமது பலத்தை நம்பும் வரை, எங்கள் பயணம் ஒருபோதும் முடிவடையாது."



அதனால், யாமினியும் சிட்டுவும்  தங்கள் சாகசங்களைத் தொடர்ந்தனர். அவர்கள் எங்கு சென்றாலும் மகிழ்ச்சியையும், அன்பையும், அற்புதங்களையும் பரப்பினர்.

.

வருடங்கள் கடந்தும், யாமினி தனது பிரமிப்பு உணர்வை இழக்கவில்லை.  யாமினியும் சிட்டுவும் இணை பிரியாத தோழிகளாக வாழ்ந்தனர்.



அவர்களது மாயாஜாலப் பயணங்கள் கற்பனை நிறைந்த இதயத்துடனும், கனவு காணப் பயப்படாத மனத்துடனும் தான் நிறைவேறின என்பதை அவர்கள் உணர்ந்தனர்.

**முற்றும்**

**Publisher:** STEM-Kalvi Charity

**Email**: STEMkalvi@gmail.com

**Web:** WWW.STEMkalvi.org

**Writer :** Poonkothai, UK

**Book: Yaminiyin Athisaya Ulagam**
**(யாமினியின் அதிசய உலகம்)**

**Language: Tamil**

**Reading Level**: 4.1

**ISBN:** xxxxxxx

**Editor**: Dr K Ganesan, Founder and Director, STEM-Kalvi

This book is part of the **'1000 Reading Books'** initiative by STEM-Kalvi Charity, dedicated to creating literature for children under 10. These books aim to boost literacy rates in schools, addressing a critical need revealed in a UNICEF study conducted in 2022



**About the writer :** Poonkothai migrated from Sri Lanka to the UK in 1989. After completing her graduation and post-graduation in science and education, she entered the educational field. She has been teaching as a qualified full-time English teacher at Government Schools in the UK for several years. Poonkothai published a Health Promotion book in 2004 and a collection of short stories in 2022, dedicating her Tamil skills to her late mother, a Tamil teacher, Puvaneswary.

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sub Level | 1.1 | 1.2 | 1.3 | 2.1 | 2.2 | 2.3 | 3.1 | 3.2 | 3.3 | 4.1 | 4.2 | 4.3 | 5.1 | 5.2 | 5.3 | 6.1 | 6.2 | 6.3 |
| Main Level | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | |

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics